முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 646**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

06.07.2021, செவ்வாய்கிழமை

1. பரபிரம்மமே ஆறுமுக அரங்கா
   பரமானந்த சதாசிவசற்குருவே ஞானதேசிகா
   வரம்பெற்று என்பால்வந்த மகாசக்தியே
   வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
   ஞாலமதில் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
   கனிவேலவன் யானும் பிலவமிதுன திங்களில் உரைப்பேன்
   கருணைகொண்டு அரங்கன் நீசெய்த தவபலமே
3. தவபலமே இந்த கலியுகம் பாதுகாப்பு மிக்க
   தர்மஞான யுகமாக மாறக்கூடும்
   பெருமைமிக்க அரங்கன் உன் சன்மார்க்கமே
   பேரிடரில்இருந்து மக்களை மீட்டு காத்தருளும்
4. அருளும் பொருளும் ஆனந்த வாழ்வும்
   அரங்கன் உன்தயவால் உலகோர்க்கு கிட்டநேரும்
   இருளும் பேரிடர் துன்பங்களும்
   இன்னலும் உலகமக்களை உன்கருணையால் விட்டகலும்
5. அகலுமே ஆற்றல்பட நச்சுக்கிருமி
   ஆபத்தை மக்களுக்குத் தந்தபோதும்
   மகான் அரங்கன் உன் தீட்சை பலத்தால்
   மரணத்தை வெல்லும்சக்தி மக்களுக்கு கிட்டநேரும்
6. நேர்மைபட நீசெய்யும் தர்மத்தால்
   நிலவுலகம் நிலைத்து நிற்கும்
   பெருமைகொண்டு நீ தருகின்ற உபதேசம்
   பேருலகையே நீதிமிக்க ஞானயுகமாக மாற்றக்கூடும்
7. கூடவே அரங்கன் உன்னுள் ஆறுமுகன் யான்
   குருவாக சூட்சுமமாக திருவருளாக நிறைவாகநின்று காத்தருள
   நெருங்கி உன்பால் தொடர்பு கொண்டு உன்
   நிழலில் இருப்பவர்க்கு இந்தஉலகில் பிறவாபெரும்பேறு கிட்டும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–